தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### காற்றழுத்தத் தாழ்வு நிலை: 2 நாள்களுக்கு மழை நீடிக்கும்



வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக, தமிழகத்தில் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை கடந்த சில நாள்களுக்கு முன்பு உருவானது. இதன் காரணமாக தமிழகத்தில் கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது. புதன்கிழமை நிலவரப்படி இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை தென்மேற்கு வங்கக்கடலில் இலங்கை, தமிழகப் பகுதியை ஒட்டிய கடலில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களுக்கு ஆங்காங்கே கனமழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையின் பல இடங்களில் வியாழக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழை பெய்யும். புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் சிதம்பரத்தில் 80 மி.மீ. மழையும், குன்னூரில் 70 மி.மீ. மழையும் பெய்துள்ளது. பாபநாசத்தில் 50 மி.மீ. மழையும், மாதவரத்தில் 40 மி.மீ. மழையும் பெய்துள்ளது. கோத்தகிரி, சிவகிரி, அம்பாசமுத்திரம் (30 மி.மீ.), மகாபலிபுரம், சிவகங்கை, அறந்தாங்கி, பாளையங்கோட்டை (20 மி.மீ.), சென்னை, மணிமுத்தாறு, செங்குன்றம், காஞ்சிபுரம், குழித்துறை,

மேட்டுப்பாளையம், விழுப்புரம், மானாமதுரை, சோழவரம், மன்னார்குடி, ஜெயங்கொண்டம், அரியலூர், கடலூர் (10 மி.மீ.) ஆகிய இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**சென்னையில் மழை**

சென்னையின் பல இடங்களில் புதன்கிழமை பரவலாக மழை பெய்தது. வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக சென்னையில் புதன்கிழமை பல இடங்களில் பலத்த மழை பெய்தது. மழை பிற்பகல் வரையில் நீடித்தது. காலையில் அலுவலக நேரத்தில் மழை பெய்ததால் அலுவலகம் செல்வோர், பள்ளிகளுக்குச் செல்வோர் என பல தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். மேலும் சாலைகளிலும் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்த மழைக்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையே காரணம் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறினர். புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலான நிலவரப்படி மீனம்பாக்கத்தில் 26.6 மி.மீ. மழையும், நுங்கம்பாக்கத்தில் 8.4 மி.மீ. மழையும் பெய்தது.

**<u>பசுமையானது கடம்பூர் கிராமம்</u>**

கடம்பூர் மலைக் கிராமங்களில் அண்மையில் பெய்த மழை காரணமாக பயிர் சாகுபடி அதிகரித்துள்ளது. தொடர்ச்சியாகப் பெய்த கனமழையால் கேர்மாளம், திக்கரை, கோட்டாடை, குட்டியாடா, பூதாளபுரம், காடட்டி, கரளையம், அணைக்கரை, சின்னசாலட்டி, இருட்டிபாளையம், பசுவனா புரம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள அனைத்து குளம், குட்டைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. பயிர் சாகுபடிக்கேற்ப விவசாய நிலத்தில் ஈரப்பதம் பிடித்துள்ளதால் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு, மக்காச்சோளம், ராகி, மஞ்சள், பீன்ஸ், துவரை போன்றவற்றை சாகுபடி

செய்து வருகின்றனர். கேர்மாளம், திக்கரை பகுதியில் மக்காச்சோளம் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். அறுவடைக்குப் பிறகு மீண்டும் சாகுபடி செய்ய விவசாயிகள் துவங்கி விட்டனர். அதற்கான உழவுப் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். விளை நிலங்கள் தற்போது பச்சைக் கம்பளம் விரித்தாற்போல கண்களுக்கு விருத்தளிக்கிறது. வனப்பகுதியில் உள்ள கசிவுநீர்க் குட்டைகள், தடுப்பணைகளில் போதிய தண்ணீர் இருப்பதால் வன விலங்குகளின் நடமாட்டம் குறைந்துள்ளது. "பட்டுப்புழு விதை தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்' புதிய பட்டுப்புழு விதை தொழில்நுட்பங்களை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வலியுறுத்தினார். பெங்களூருவில் உள்ள தேசிய பட்டுப்புழு விதை நிறுவனம், சேலம் மண்டல பட்டு வளர்ப்பு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் பட்டு வளர்ப்பு விவசாயி களுக்கான பயிற்சி முகாமை புதன்கிழமை நடத்தியது. முகாமை தொடக்கிவைத்து மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் பேசியது:

பட்டு வளர்ப்பு தொழிலானது குறைந்த செலவில் நல்ல லாபம் தரக் கூடிய விவசாயத் தொழிலாக உள்ளது. பட்டுப்புழு கூடுகள் மகசூலுக்குத் தேவையான பல்வேறு காரணிகளில் முட்டைப் புழுவின் தரமே அடிப்படையாகும். பட்டுப்புழு விதை தொழில்நுட்பத்தை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை துறை விவசாயிகளுக்கு சாதமான நிலை நிலவுவதைப் போல, பட்டு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் சாதமான நிலை உள்ளது என்றார். முன்னதாக, பட்டுப்புழு விதைக் கூடுகள் உற்பத்தி நவீன தொழில்நுட்பங்கள் குறித்த புத்தகத்தை ஆட்சியர் வெளியிட்டார். முகாமில், தேசிய பட்டுப்புழு விதை நிறுவனத்தின் இயக்குநர் பி.எஸ்.அங்கடி, சேலம் மண்டல பட்டுப் புழு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் சிக்கன்னா,

எஸ்.ராஜ்குமார், ஜே.ரவிக்குமார், கிருஷ்ணகிரி பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி பாலசரஸ்வதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மாற்றம் தரும் மக்காச்சோள சாகுபடி!



தொடர்ந்து இருபோகம் நெல் சாகுபடியை விட, ஒரு போகம் மக்காச்சோளம் பயிர் செய்தால் அதிக லாபத்தை ஈட்டலாம் என வேளாண் அறிவியல் நிலையம் யோசனை கூறியுள்ளது. விவசாயிகள் எப்போதும் பாரம்பரியமாக நெல் பயிரிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒரு மாற்றத்துக்காக மக்காச்சோளப் பயிரை சாகுபடி செய்ய முன்வந்தால் அதிக லாபத்தை ஈட்ட முடியும் என்கிறார் காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் முருகன். இதுகுறித்து அவர் கூறும் தகவல்கள்: மக்காச்சோளத்தை தேர்வு செய்யக் காரணம்: மக்காச்சோள சாகுபடிக்கு மிகக் குறைந்த வேலையாள்கள் போதுமானது. எல்லா வகையான மண்ணிலும் இப் பயிரை சாகுபடி செய்யலாம். ஆண்டு முழுவதும் பயிரிடலாம். இதனை நெல் பயிருடன் ஒப்பிடும்போது குறைந்த சாகுபடி செலவே ஆகும். இந்தப் பயிரில் பொதுவாகப் பூச்சி, நோய்த் தாக்குதல் இருக்காது. விவசாயிகள் சுலபமாக சாகுபடி செய்து அதிக வருமானம் ஈட்டலாம். தமிழகத்தில் இப்போது மக்காச்சோளத்துக்கு அதிக அளவில் கிராக்கி உள்ளது. ஏனென்றால் கோழிப் பண்ணை, கால்நடைத் தீவனங்களுக்கு மிக முக்கிய உணவாக மக்காச்சோளம் தேவைப்படுகிறது. அதனால் வியாபாரிகள் மக்காச்சோளத்தை வேறு மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்கின்றனர். எனவே மக்காச்சோளப் பயிரை நம் மாநிலத்திலேயே பயிரிட்டால், விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைப்பதோடு, நம் மாநிலத்தின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாம். எனவே, விவசாயிகளின் நிலைமையை அறிந்து கடந்த 2

ஆண்டுகளாக மாற்றுப் பயிராக மக்காச்சோளத்தைப் பிரபலப்படுத்தும் நோக்கில் காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையம் ஈடுபட்டுள்ளது. முதல்நிலை செயல் விளக்கம் மூலமும் அரசு, தனியார் பங்களிப்பு முறையிலும் மக்காச்சோளத்தைப் பிரபலப்படுத்தி வருகிறது.

**மக்காச்சோள சாகுபடி தொழில்நுட்பங்கள்:**

பருவங்கள்: மானாவாரி - ஆடிப்பட்டம், புரட்டாசிப் பட்டம்.

ரகங்கள்: சிஓஎச்எம்6, இதர தனியார் நிறுவன விதைகள்.

பயிரின் வயது: 100 முதல் 115 நாள்கள்.

நிலம் தயாரித்தல்: மணல்பாங்கான வண்டல், செம்மண், கருவண்டல் மண் மிகவும் ஏற்றவை. கோடைக் காலத்தில் சட்டிக் கலப்பையைக் கொண்டு நன்றாக உழவு செய்ய வேண்டும்.பிறகு இரும்புக் கலப்பை அல்லது நாட்டு மரக் கலப்பையைக் கொண்டு 2 முதல் 3 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். தொழு உரம் இடுதல்: ஒரு ஹெக்டேருக்கு 12.5 டன் தொழுஉரம் அல்லது மக்கிய தொழுஉரம் அல்லது மக்கிய தேங்காய் நாரைச் சமமாகக் கடைசி உழவுக்கு முன் சீராக இட வேண்டும். மேலும் அதனுடன் 5 பாக்கெட் அசோஸ்பைரில்லம் கலந்து நன்கு உழவு செய்யவும். பாத்திப் பிடித்தல்: 45 செ.மீ. இடைவெளியில் பாத்தி அமைக்கவும். இதற்கு இடை இடையே தண்ணீர்ப் பாய்ச்சும் வாய்க்கால் அமைக்கவும். இல்லையென்றால் 10 அல்லது 20 சதுர மீட்டர் அளவில் பாத்தியை அமைக்கலாம். ஒரு செடிக்கும் மற்றோர் செடிக்கும் இடையே 25 செ.மீ. இடைவெளியும், பாத்திக்கும் மற்றொரு பாத்திக்கும் 45 செ.மீ. இடைவெளி இருக்க வேண்டும். விதைகள்: ஒரு ஹெக்டேருக்கு 20 கிலோ விதை தேவைப்படும். விதைத்தல்: 3 செ.மீ. ஆழத்தில் விதையை நடவு செய்ய வேண்டும். பின்னர் மண்ணால் மூட வேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு ஒரு குழிக்கு ஒரு விதை வீதமும், இதர ரகங்களுக்கு குழிக்கு 2

விதை எனவும் நட வேண்டும். உர நிர்வாகம்: மண் பரிசோதனைக்கு ஏற்ப தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்துகளை இட வேண்டும். தழை, மணி, சாம்பல் சத்துகளைப் பொதுவாக அளிக்க வேண்டும். அடியுரமாக பாதி அளவு தழைச்சத்தும், சாம்பல் சத்தும், முழுவதுமாக மணிச்சத்தும் இடவேண்டும். மீதமுள்ள பாதி அளவு தழைச்சத்து, சாம்பல் சத்தை நட்ட 25 முதல் 30-ஆவது நாளில் இட வேண்டும். களை நிர்வாகம்: அட்ரசின் என்ற களைக் கொல்லியை நட்ட மூன்று நாள்களுக்குள் 1 ஹெக்டேருக்கு 1,250 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். பிறகு 25 முதல் 30-ஆவது நாளில் கையால் களை எடுக்க வேண்டும். நீர் நிர்வாகம்: மண் அமைப்புக்கு தகுந்த மாதிரி நீர்ப் பாய்ச்ச வேண்டும். விதை விதைத்தவுடன் - ஒரு நீர்ப் பாசனம், உயிர் தண்ணீர் - 3 முதல் 4 நாள்கள் கழித்து, விதைத்த - 12, 22, 30-ஆம் நாள்களில் நீர்ப் பாய்ச்ச வேண்டும். பூக்கும் பருவத்தில் இரு முறையும், கதிர் பிடிக்கும் பருவத்தில் இரு முறையும், பால் பிடிக்கும் பருவத்தில் ஒரு முறையும், முதிர்ச்சிப் பருவத்தில் ஒரு முறையும் நீர்ப் பாய்ச்ச வேண்டும். அறுவடைக்கு 10 நாள்களுக்கு முன்பே நீர் பாய்ச்சுவதை நிறுத்த வேண்டும். அறுவடை: மக்காச்சோளக் கதிரில் உள்ள விதைகள் காய்ந்து, கடினமாகிய பின் வெளியே மூடி உள்ள சோகை மஞ்சள் நிறமாக மாறுவது அறுவடைக்கான அறிகுறி ஆகும். கதிர் நன்குக் காயும் வரை சூரிய ஒளியில் காய வைக்க வேண்டும். கதிர் அடிக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தி, கதிரில் உள்ள மணிகளை நீக்க வேண்டும். தூற்றுதல் மூலம் மணியைச் சுத்தம் செய்து, கோணிப் பைகளில் சேமிக்கலாம். மகசூல்: ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 5 ஆயிரம் கிலோ வரை மக்காச்சோள மணிகள் கிடைக்கும். இதுகுறித்து மேலும் விவரங்களை அறிய காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044-27452371 என்ற தொலைபேசி எண்ணில் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

<u>**செண்டு மல்லியில் அதிக லாபம்: விவசாயிகளுக்கு ஆலோசனைகள்**</u>



வருகிற பிப்ரவரி மாதத்தில் செண்டு மல்லி பயிரிட்டால் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என மாவட்ட தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகள்: மண் வகைகள்: அனைத்து மண் வகைகளிலும் பயிரிடலாம். மணற் பாங்கான மண், களிமண் கலந்த மண் மிகவும் ஏற்றது. பருவம்: செண்டு மல்லி பயிரிட ஏற்ற பருவமாக அக்டோபர் முதல் ஜனவரி வரையிலும், பிப்ரவரியில் இருந்து மே மாதம் வரையிலும் பயிரிட்டால் விவசாயிகள் அதிக பலன் பெறலாம். விதையளவு: செண்டு மல்லி (ஒரு ஹெக்டேருக்கு) குட்டை ரகத்துக்கு 75 ஆயிரம் விதைகளும், நெட்டை ரகத்துக்கு 55 ஆயிரம் விதைகளும் இட வேண்டும். நாற்றங்கால் பராமரிப்பு: பதப்படுத்தப்பட்ட சென்னை நார்க் கழிவை பாலித்தீன் வளர் தட்டுகளில் நிரப்பி, குழிக்கு ஒரு விதை வீதம் நிரப்பி ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி பாலித்தீன் பேப்பர் மூலம் மூடி, மூன்று நாள்கள் 50 சதவீத நிழலில் அல்லது நிழல் வலையின் கீழ் வைப்பதன் மூலம் முளைப்புத் திறன் அதிகரிக்கும். ஒரு நாளைக்கு இருமுறை பூ வாளி மூலம் தண்ணீர் தெளிக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 19:19:19: உரத்தை லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். நடவு முறை: 25 நாள்கள் வளர்ந்த நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். இடைவெளி, செடி எண்ணிக்கை: ஒரு ஹெக்டேருக்கு 74 ஆயிரம் செடிகள் என குட்டை வீரிய ஒட்டு ரகம் 40 ல 30 சென்டி மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நெட்டை வீரிய ஒட்டு ரகத்தை ஒரு ஹெக்டேருக்கு 55 ஆயிரம் செடிகள் நட வேண்டும். அதை 60ல30 என்ற அளவில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 30 முதல் 60-ஆம் நாளில் களை எடுக்க வேண்டும். களையெடுக்கும் சமயத்தில் மண் அணைத்தல் அவசியமாகும்.

அப்படி மண் அணைப்பதால் நன்கு வேர்ப் பிடிப்பும், செடியின் தாங்குத் திறனும் அதிகரிக்கிறது. இந்த முறையை விவசாயிகள் முறையாகப் பின்பற்றினால் நடவு செய்த 60-ம் நாளில் இருந்து அறுவடையைத் தொடங்கலாம். தினமும் காலை நேரத்தில் செடிகளில் இருந்து பூக்களைக் கொய்து கூடை அல்லது சாக்குப்பையில் அடைத்து விற்பனைக்கு அனுப்பலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>இந்தியாவின் தயவால் பாக்.,கில் காய்கறி விலை சரிவு</u>**

பெஷாவர்: பாகிஸ்தானின் வடமேற்கு நகர சந்தைகளில், இந்திய காய்கறிகள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுவதையடுத்து, காய்கறிகள் விலை சரிவை கண்டுள்ளது.குறிப்பாக, பட்டாணி மற்றும் தக்காளிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதை தொடர்ந்து, பாகிஸ்தான் சந்தைகளில் அதன் விலை உச்சத்தில் இருந்தது. இந்நிலையில், அவற்றை இந்தியாவிலிருந்து அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டதையடுத்து, 3 ஆயிரம் ரூபாயாக இருந்த ஒரு மூடை பட்டாணி விலை, 1,200 ரூபாயாகவும், 22 கிலோ தக்காளி மூடை விலை, 700 ரூபாயாகவும் வீழ்ச்சி கண்டுள்ளது.இதுகுறித்து பெஷாவர் சந்தை காய்கறி வியாபாரி, மாலிக் பதே முகமது கூறியதாவது: இந்தியாவிலிருந்து மொத்தம் 25 லாரிகளில், காய்கறி கொண்டு வரப்பட்டது. இதில், 10 லாரிகள் காபூலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது போக, மீதமுள்ள 15 லாரி காய்கறிகள் பெஷாவர் சந்தையில் விற்பனை செய்யப்பட்டன. இந்திய காய்கறிகள் வரத்தால், விலை கட்டுக்குள் வந்துள்ளது. இல்லையன்றால், காய்கறிகள் விலை பன்மடங்கு அதிகரித்திருக்கும்.பெஷாவரில் இஞ்சி

உற்பத்தி முடிவுக்கு வந்துள்ளது. இதையடுத்து, அதனையும், இந்தியா விலிருந்து அதிகளவில் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. தற்போது, உள்ளூர் சந்தைகளில், 50 கிலோ இஞ்சி மூட்டை, 4,800 ரூபாய் என்ற அளவில் விற்பனையாகிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

## கார்த்திகை விரதம் எதிரொலி கத்தரிக்காய் விலை கிடுகிடு

ஆர்.கே.பேட்டை: கார்த்திகை விரதம் காரணமாக, பலரும் சைவத்திற்கு மாறியுள்ளனர். இதையடுத்து, சைவ உணவில் அதிகம் பயன்படுத்தப் படும் கத்தரிக்காயின் தேவை அதிகரித்துள்ளது. சபரிமலைக்கு மாலை அணிந்து விரதம் மேற்கொண்டுள்ளவர்கள் மற்றும் கார்த்திகை சோம வார விரதம் மேற்கொண்டுள்ளவர்களால், சைவ உணவு தயாரிப்பு அதிகரித்துள்ளது. சைவ உணவில், பொரியல் மற்றும் சாம்பாரில் அதிகளவு பயன்படுத்தப்படும் கத்தரிக்காயின் தேவை அதிகரித்துள்ளது. கத்தரிக்காய் மலிவாக கிடைப்பதால், அதிகளவில் பயன்படுத்தப் படுகிறது. ஆனால், தற்போது கத்தரிக்காய் வரத்து குறைந்துள்ளதால், விலை உச்சத்திற்கு உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ, 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது, தற்போது கிலோ, 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இந்த விலை உயர்வு, வரும் மார்கழி மாதமும் தொடரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, கத்தரி பயிர் செய்த விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.

## சோலார் உலர்த்திகள் அமைக்கவிவசாயிகளுக்கு 50% மானியம்

திருவண்ணாமலை:வேளாண் உற்பத்தி பொருட்களை, சோலார் உலர்த்திகள் மூலம் உலர்த்த மற்றும் பதப்படுத்த, விவசாயிகள் முன் வரவேண்டும் என, திருவண்ணாமலை கலெக்டர் ஞானசேகரன் அறிவுறுத்தி உள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: மரபுசாரா எரிசக்தியை ஊக்கப்படுத்துவதில், தமிழகம் முன்னணி மாநிலமாக உள்ளது. சூரிய சக்தி மூலம் வேளாண் பொருட்களை

உலர்த்துவது மற்றும் பதப்படுத்துவது சுலபம். சூரிய சக்தி பயன்பாட்டை விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்கள் மேற்கொள்ள ஊக்குவிக்கும் வகையில், 50 சதவீத மானியத்தில், சோலார் உலர்த்திகள் நிறுவப்பட்டு வேளாண் பொருள் பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல் ஆகியவை வேளாண் பொறியியல் துறை மூலம் மேற்கொள்ள தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.சோலார் உலர்த்திகள், நான்கு லட்ச ரூபாய் மதிப்பில், 400 சதுர அடி அளவில் அமைக்கலாம். உலர்த்திகள் மூலம் வாழைப்பழம், தக்காளி, தேங்காய், காய்கறி மற்றும் பழ வகைகள் பதப்படுத்தி, மதிப்பு கூடுதல் செய்யலாம். தனிநபர், விவசாயி அல்லது விவசாய குழுக்கள் விண்ணப்பிக்கலாம். திருவண்ணாமலை, போளூர், செங்கம், தண்டராம் பட்டு, கலசப்பாக்கம் ஆகிய, ஐந்து தாலுகாவை சேர்ந்தவர்கள், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), 4/13 குறிஞ்சி நகர், வேங்கிக்கால் அஞ்சல், திருவண்ணாமலை என்ற முகவரியிலும், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, ஆகிய தாலுகாவை சேர்ந்தவர்கள், உதவி செயற்பொறியாளர், 67, கார்த்திகேயன் சாலை, சைதாப்பேட்டை, ஆரணி என்ற முகவரியிலும் தொடர்பு கொண்டு விவபரம் பெறலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## விழுப்புரத்தில் 10 மி.மீ., மழை

விழுப்புரம்: விழுப்புரத்தில் 10 மி.மீ., மழை அளவு பதிவானது. விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 18.50 மழை அளவு பதிவானது. விழுப்புரத்தில் 10 மி.மீ., மழை, உளுந்தூர்பேட்டையில் 7 மி.மீ., கள்ளக்குறிச்சியில் 1.50 மி.மீ., மழை அளவும் பதிவானது. மாவட்டத்தில் சராசரியாக 2.06 மி.மீ., மழை அளவு பதிவானது. கச்சிராயபாளையம்: கள்ளக்குறிச்சி வேளாண்மை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி வாரசந்தை நேற்று துவங்கியது. கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், தியாகதுருகம், பெரம்பலூர், திட்டக்குடி உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து 35 க்கும் மேற்பட்ட விவசாயிகள் 100 க்கும் மேற்பட்ட பஞ்சு மூட்டைகளை விற்பனைக்கு எடுத்து வந்தனர். இதில் அதிபட்ச

விலையாக ஒரு குவிண்டால் 4150 ரூபாயும், குறைந்த பட்சமாக 3820 ரூபாய்க்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மகுடஞ்சாவடி, புஞ்சை, புளியம்பட்டி, திருப்பூர் பகுதிகளிலிருந்து பஞ்சுகளை கொள்முதல் செய்ய வியாபாரிகள் வந்திருந்தனர். வாரந்தோறும் புதன்கிழமை நடக்கும் பருத்தி சந்தை வரும் ஜூன் மாதம் வரை நடக்கும் என மேலாண்மை இயக்குனர் கண்ணன் தெரிவித்தார்.

## இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி

நாமக்கல்:"லாபகரமான வெள்ளாடு வளர்ப்பு மற்றும் பராமரிப்பு, பசுந்தீவனம் உற்பத்தி குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல்-மோகனூர் சாலையில் அமைந்துள்ள, கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், பண்ணையாளர் மற்றும் விவசாயிகள், லாபகரமான முறையில் வெள்ளாடு வளர்ப்பு, பராமரிப்பு மற்றும் பசுந்தீவனம் உற்பத்தி குறித்த, ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு, வரும், 16ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. மேலும், விவரங்களுக்கு, 04286-266 345, 266 244 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## *கி.கிரியில் திடீர் மழைவிவசாயிகள் மகிழ்ச்சி*

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி நகரில், நேற்று மாலை திடீரென கன மழை பெய்ததால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். கிருஷ்ணகிரி நகரில், சில நாட்களாக, காலை மற்றும் மாலை வேளையில், அதிக பனிப்பொழிவு காணப்பட்டது. பகல் நேரத்தில், கடும் வெப்பம் வீசி வந்தது. இந்நிலையில், நேற்று காலை முதல் கிருஷ்ணகிரியில், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பிற்பகல், 3 மணிக்கு, திடீரென கன

மழை பெய்தது. அரை மணி நேரம் பெய்த கன மழையால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழை நீரில், சாக்கடை நீரும் கலந்து சென்றதால், பாதசாரிகள் கழிவு நீரில் நடந்து சென்றனர். இதேபோல், போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியிலும், நேற்று மதியம், திடீர் மலை பெய்தது.இதனால், மானாவாரி நிலத்தில் சாகுபடி செய்யப்பட்ட கொள்ளு போன்ற சிறு தானியங்களை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பனிப்பொழிவால் தக்காளியில் இலைப்புழு நோய் தாக்குதல்**

ஓசூர்:ஓசூர் தாலுகாவில், கடும் பனிப்பொழிவால், தக்காளி செடிகளில் இலைப்புழு நோய் தாக்கி வருகிறது. இதனால் சாகுபடி குறைந்து, தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட, ஓசூர், தளி, கெலமங்கலம், சூளகிரி, ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட சுற்று வட்டார பகுதிகளில், 5,000 ஏக்கருக்கு மேல், ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் தக்காளி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கு விற்பனைக்கு செல்கிறது.ஓசூர், தேனிகனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் கடும் பனிப்பொழிவு காரணமாக, தக்காளி செடியில் இலைப்புழு தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால், சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளதால், விலை கிடுகிடு வென உயர்ந்து வருகிறது.உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி, 35 ரூபாய், வெளிச்சந்தைகளில் கிலோ 40 ரூபாய், சில்லறை விற்பனை கடைகளில், கிலோ 50 ரூபாய் வரையும் விற்பனையாகிறது. இந்த விலைஉயர்வு இன்னும் ஒரு மாதம் நீடிக்க வாய்ப்புள்ளது.இலைப்புழு நோயை கட்டுப்படுத்துவது குறித்து, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில், ஒரு மாதமாக, கடும் குளிரும், பனிப்பொழிவும் நிலவி வருகிறது. இதன்

காரணமாக, தக்காளி செடிகளில் இலைப்புழு நோய் தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால், தக்காளி உற்பத்தி திறன் பாதிக்கப் பட்டுள்ளது. தக்காளி பணப்பயிர் பட்டியலில் உள்ளதால், இலைப்புழு நோயை கட்டுப்படுத்த, மானிய விலையில் உரம் வழங்கப்படுவதில்லை, இந்நோயை கட்டுப்படுத்த, விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறையினரை அணுகி, அவர்கள் பரிந்துரை செய்யும் மருந்துகளை, பயிர்களுக்கு தெளித்து, இலை புழுவை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>ஈரோட்டில் திடீர் மழை</u>

ஈரோடு: ஈரோட்டில், கடந்த, இரு தினங்களாக மழை பெய்தது. மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை அக்.,- நவ., மாதத்தில் ஓரளவு பெய்தது. குறிப்பாக சில தினங்கள் மட்டும் கன மழை கொட்டியது. அதன் பின், மழை பெய்யவில்லை. வறண்ட வானிலையே தொடர்ந்தது. கார்த்திகை தீபத்துக்கு பின், மழை இருக்காது என்ற முதுமொழியால், மழை இருக்காது என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் இருந்தனர்.இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு குளிர்ந்த காற்று, மாவட்டத்தில் பரவலாக வீசியது. இரவு, 9 மணிக்கு மேல், குறைந்த நேரம், மழை நீடித்தது. இம்மழையால், பனிப்பொழிவு குறைந்தது.நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, பவானிசாகர்,7 மி.மீட்டர், கோபி,2, ஈரோடு,10, பவானி,1.2, பெருந்துறை,1.5, எலந்தகுட்டைமேடு,17 மி.மீட்டர் என மழை பதிவாகி உள்ளது. நேற்று காலையும், லேசான சாரல் மழை இருந்தது. ஆனால், அதன் பின் வெயில் சுட்டெரித்தது. ஆனால், நேற்று மாலை, 5.30 மணிக்கு மேல், மீண்டும் பலத்த காற்றுடன், மழை பெய்ததால், இதமான சூழல் நிலவுகிறது.

## <u>"அரசின் திட்டங்களை கேட்டு பெற விவசாயிகள் முன் வரவேண்டும்'</u>

பந்தலூர் :"விவசாயிகள் அரசின் திட்டங்களை கேட்டு பெற முன்வர வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டது. சி.டி.ஆர்.டி.,

அறக்கட்டளை சார்பில், பந்தலூர் அருகே விலங்கூர் கிராம உழவர் மன்ற துவக்க விழா, பிதர்காடு சமுதாய கூடத்தில் நடந்தது. சி.டி.ஆர்.டி., நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வரவேற்றார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் அருள்செல்வன் பேசியதாவது:நாட்டின் பொருளாதார வளர்ச்சி உழவர்களின் கைகளில் தான் உள்ளது. நாட்டில் நவீனமயமான எத்தனை தொழிற்சாலைகள் உருவாக்கினாலும், உழவர்களின் பணி சிறப்பானதாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உள்ளது. இதனை ஊக்கப்படுத்தும் வகையில், சிறப்பான முறையில் நடக்கும் உழவர் மன்றங்களின் வளர்ச்சிக்காக நபார்டு வங்கி சார்பில் ஆண்டுதோறும் தலா, 10ஆயிரம் ரூபாய் நிதி உதவி செய்யப்படும். உழவர்கள் தங்கள் விவசாய தொழிலை மேம்படுத்திக்கொள்ள மாதந்தோறும் கூட்டம் நடத்தி அரசின் திட்டங்கள், அவற்றை பெறும் முறைகள் குறித்து விவாதித்து, அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் சலுகைகளை பெற முன்வரவேண்டியது அவசியமாகும். இவ்வாறு அருள்செல்வன் பேசினார்.மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சுந்தரபாரதி, பிதர்காடு கூட்டுறவு வங்கி தலைவர் ராபர்ட், நெலாக்கோட்டை வங்கி செயலாளர் முகமது, தோட்டக்கலை கள அலுவலர் நம்பிராஜன் உள்ளிட்டோர் பேசினர். வாசுதேவன் நன்றி கூறினார்.

## <u>விவசாய சங்க கூட்டம்</u>

கோத்தகிரி : கோத்தகிரியில் மலை மாவட்ட சிறு விவசாயிகள் நலச்சங்க கூட்டம் நடந்தது. சங்க பொதுசெயலாளர் குள்ளா கவுடர் வரவேற்றார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: கோத்தகிரியில் அடுத்த மாதம் நடக்கும் சங்கத்தின் மூன்றாவது மாநாட்டில், தேயிலை விவசாயிகள் மற்றும் கொள்முதல் நிலைய ஏஜன்ட்களை திரளாக திரட்டி, மாநாட்டை சிறப்பாக நடத்தவேண்டும்' என்பன உட்பட தீர்மானங்கள்

நிறைவேற்றப்பட்டன. மாவட்ட தலைவர் தும்பூர் போஜன் தலைமை வகித்தார்.

**<u>க.பரமத்தி சுற்று வட்டாரத்தில்கண்வலிக்காய் விற்பனை ஜோர்</u>**

க.பரமத்தி:பூச்சி கொல்லி மருந்து தயாரிக்க பயன்படும், அரிய வகை பொருளான கண்வலிக்காய் மற்றும் கிழங்கு விற்பனை, க.பரமத்தி சுற்று வட்டார பகுதியில் ஜோராக நடக்கிறது.கண்வலிக்காய் மற்றும் கிழங்கு, பூச்சி மருந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. கண்வலிக்காய் மற்றும் கிழங்கு, வட மாநிலங்களில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. தமிழகத்தில், க.பரமத்தி, மூலனூர், ஒட்டன்சத்திரம், ஜெயம்கொண்டம், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் கண்வலிக்காய் மற்றும் கிழங்கு பயிரிடப்படுகிறது. க.பரமத்தி மற்றும் மூலனூர் பகுதியில் பயிரிடப்படும் காய் மற்றும் கிழங்குகளை, வட மாநிலங்களை சேர்ந்த ஆந்திரா, விஜயவாடா, ஒரிஸா, பெங்களூரு உள்ளிட்ட பகுதியை சேர்ந்த வியாபாரிகள், க.பரமத்தியில் முகாமிட்டு வாங்கி செல்கின்றனர். விளைச்சல் காலங்களில் ஒரு கிலோ, 50 ரூபாய் முதல், 70 ரூபாய் வரை விற்பனையாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையின்மையால், விளைச்சல் குறைவாக உள்ளது. தற்போது, 100 முதல், 150 ரூபாய் வரை விற்பனையாவதால், க.பரமத்தி மற்றும் சுற்று வட்டார விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வியாபாரி பழனிசாமி கூறியதாவது:கண்வலி காய், பூச்சி மருந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. கண்வலி காய் அனைத்து பகுதியிலும் கிடைப்பதில்லை. தமிழகத்தில், திருப்பூர் மாவட்டத்தில் மூலனூர் பகுதியில் உற்பத்தியாகும் காய் மற்றும் கிழங்குகள் ஒரு கிலோ, 200 ரூபாய்க்கு விலை போகிறது. மற்ற பகுதியில் விளைச்சல் குறைவாகவும், காய் மற்றும் கிழங்கு தடிமானம் குறைவாக இருப்பதால், விலை சற்று குறைவாக உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**<u>பனிப்பொழிவால் உற்பத்தி பாதிப்புமுருங்கை, தக்காளி விலை உயர்வு</u>**

கரூர்:கரூர் மாவட்டத்தில், கடும் பனிப்பொழிவு காரணமாக, முருங்கை, தக்காளி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விலை பல மடங்கு உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதிகளான கொத்தப்பாளையம், தடாகோவில், வெஞ்சாங்கூடலூர், ஈசநத்தம், அம்மாப்பட்டி, ஊத்தூர், பெரியமஞ்சுவளில சேந்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில், 50 ஆயிரம் ஏக்கரில் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அரவக்குறிச்சியில் விளையும் ருசியான முருங்கைக்கு, தமிழகம் மட்டுமல்ல, வெளி மாநிலங்களிலும் நல்ல வரவேற்பு உள்ளது. அரவக்குறிச்சி சுற்று வட்டாரத்தில் விளையும் முருங்கையை அறுவடை செய்து, க.பரமத்தி, அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்படுகிறது. சீசன் காலங்களில், அரவக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகளில் இருந்து, 15 லாரி முதல், 25 லாரிகளில் அனுப்பப் படுகிறது.கடந்த சில நாட்களாக, கரூர் மாவட்டத்தில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. பனிப்பொழிவு காரணமாக, முருங்கை பூ கருகியதால், முருங்கை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி பாதிப்பால், 50 கட்டு முருங்கை கூட வரத்தாகவில்லை. முருங்கை வரத்து குறைவு காரணமாக, விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.கடந்த சில வாரங்களுக்கு முன், 25 காய் கொண்ட ஒரு கட்டு, 30 ரூபாய் முதல் ஒரு கிலோ, 55 ரூபாய் வரை விற்கப்பட்டது. கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கை, 50 ரூபாய்க்கும், ஒரு கட்டு, 120 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. முருங்கை வரத்து குறைவு காரணமாக, நடப்பு வாரம் ஒரு கிலோ, 75 ரூபாய், ஒரு கட்டு, 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.இதே போல், தக்காளி உற்பத்தி குறைவு காரணமாக,

சில்லரை விற்பனையில் ஒரு கிலோ 40 ரூபாயாக உயர்ந்துள்ளது. விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியையும், பொது மக்களுக்கு கவலையையும் ஏற்படுத்தி உள்ளது.

**சீஸன் முடிந்து விட்டதால்வெற்றிலை உற்பத்தி குறைவு**

வேலாயுதம்பாளையம்:கரூர் மாவட்டம், நொய்யல் அருகே புங்கோடை, சேமங்கி, முத்தனூர், கோம்பு பாளையம், திருக்காடுதுறை, தவுட்டுப் பாளையம், என்.புகழூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வெள்ளக்கொடி, கற்பூரி போன்ற வெற்றிலை ரகங்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வெற்றிலைகளை வேலாயுதம் பாளையம் பகுதிகளில் செயல்பட்டுவரும் தனியார் வெற்றிலை மண்டிகளுக்கும், விவசாயிகள் அசோசியேசன் வெற்றிலை மண்டிக்கும் அனுப்பி வைக்கின்றனர். இங்கிருந்து, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரம் இளங்கால் வெள்ளக்கொடி வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை, 2,000 ரூபாய்க்கும், முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை, 900 ரூபாய்க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை, 2,000 ரூபாய்க்கும், முதிகால் கற்பூரி வெற்றிலை, 1,100 ரூபாய்க்கும் விற்பனை யானது. நேற்று இளங்கால் வெள்ளக்கொடி வெற்றிலை, 3,000 ரூபாய்க்கும், முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை, 1,500 ரூபாய்க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை, 3,000க்கும், முதிகால் கற்பூரி வெற்றிலை, 1,600க்கும் விற்பனையானது. உற்பத்தி குறைவு காரணமாக, வெற்றிலை விலை அதிகரிப்பு அடைந்துள்ளது.இதுகுறித்து வெற்றிலை விவசாயிகள் கூறியதாவது:பனி மற்றும் சீஸன் முடியும் தருணமாக இருப்பதால், வெற்றிலை உற்பத்தி குறைந்து வருகின்றனது. பல இடங்களில் வெற்றிலை அளவும் சிறியதாகி வருகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பருத்தி மகசூல் பாதிப்புதவிர்க்க மருந்து பரிந்துரை

பெரம்பலூர்:பெரம்பலூர் மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, நிலவும் சீதோஷ்ண நிலை காரணமாக, சில இடங்களில் பருத்தியின் வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது. மெக்னீசியம் மற்றும் போரான் நுண்சத்து குறைபாடுகளால், பருத்தி செடியில் அடிப்பகுதியிலுள்ள முதிர்ந்த இலைகள் சிவந்து காணப்படுகிறது. இக்குறைபாடுகளால், கணிசமான மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இக்குறைபாட்டை சரி செய்ய, 10 லிட்டர் நீருக்கு மெக்னீசியம் சல்பேட், 100 கிராம், ஜிங்க் சல்பேட் 50 கிராம், யூரியா 10 கிராம், போராக்ஸ் 20 கிராம் என்ற அளவில் எடுத்து, 10 மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து, 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.மழைநீர் தேங்கி வளர்ச்சி குன்றிய இடங்களில், நீரில் கரையும் உரம் 10 லிட்டர் தண்ணீருக்கு, 100 கிராம், 19:19:19 உரம் அல்லது 13:00:45 (மல்டி-கே) தெளித்து, பருத்தியில் கூடுதல் வருவாய் பெறலாம், என பெரம்பலூர் வேளாண்மை இணை இயக்குனர் அழகிரிசாமி தெரிவித்துள்ளார்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில்விவசாயி வங்கி கணக்கில் தொகை வரவு

தஞ்சாவூர்:"அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும், விற்பனை செய்யப்படும் நெல்லுக்கான தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்' என, தஞ்சை நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் முகமது பாதுஷா தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக, அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்குரிய தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் உடனுக்குடன் வரவு வைக்கப்படுகிறது.நெல்லுக்குரிய

தொகை, நேரடி கொள்முதல் நிலையங்களில் பணமாக பட்டுவாடா செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. விவசாயிகள், நேரடி நெல் கொள்முதல் நிலையத்துக்கு, நெல் விற்பனைக்கு கொண்டு வரும் போது, வங்கி கணக்கு புத்தகத்தின் முதல்பக்க நகலுடன் வர வேண்டும்.வங்கி கணக்கு துவங்காத விவசாயிகள், வங்கி கணக்கை உடனடியாக துவக்கி இத்திட்டத்தில் பயன்பெறலாம். இந்த நடைமுறை தொடர்பாக, மேலும் விவரம் அறிய தஞ்சை விவசாயிகள், 04362- 235823, கும்பகோணம் விவசாயிகள், 0435- 2415207, பட்டுக்கோட்டை விவசாயிகள், 04373 - 235080 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>பண்ணை மகளிர் தினத்தில் பெண் விவசாயிகள் பங்கேற்பு</u>

காந்திகிராமம் : காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மையத்தில் பண்ணை மகளிர் தினம் நடந்தது. தொழில்நுட்ப வல்லுனர் சரவணன் வரவேற்றார். அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் பேசியதாவது: "வேளாண்மை பணிகளில் பெண்களே அதிகளவில் ஈடுபடுகின்றனர். பண்ணை விவசாயிகளாகவும் உருவாகி வருகின்றனர். அவர்களின் வேலையை எளிதாக்கும் வகையில் புதிய கருவிகளையும், தொழில்நுட்பங்களையும் வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தி வருகிறது. அவற்றை தெரிந்துகொண்டு வேலைகளை சிரமமின்றி செய்ய பெண்கள் முன்வர வேண்டும்,' என்றார். தொழில்நுட்ப வல்லுனர் ஸ்ரீகுமாரி நன்றி கூறினார். முன்னோடி விவசாயிகள் மதுரை ஆனந்தி, ஜோசபின் உட்பட 100 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

## <u>தேனியில் சாரல் மழை</u>

தேனி : தேனி மாவட்டத்தில் நவம்பரில் பெய்த வடகிழக்கு பருவமழையால் விவசாய பணிகள் முழுமையாக நடந்துவருகின்றன.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்த மழையால் அணைகளுக்கும் நீர்வரத்து உள்ளது. இந்நிலையில் கடந்த சில நாட்கள் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு அவ்வப்போது மழை பெய்தது. விவசாயிகள் விவசாய பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு நாட்களாக தேனியில் வெயில் அடித்தது. நேற்று காலை லேசான சாரல் மழை பெய்தது. தொடர்ந்து மாலை 3 மணியில் இருந்து இரவு வரை மழை பெய்துகொண்டிருந்தது. பழைய பஸ்ஸ்டாண்ட் உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் தேங்கியதால் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்பட்டது.

## விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பு; மாந்தோப்புகளை குத்தகை எடுப்பதில் ஆர்வம்

பெரியகுளம் : வடகிழக்கு பருவமழையின் கொடையால் மாந்தோப்புகளை விவசாயிகள் ஆர்வமுடன் குத்தகை எடுத்து வருகின்றனர். தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக பெரியகுளத்தில் மாங்காய் விளைச்சல் அதிகளவில் இருக்கும். பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான சோத்துப்பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை, செழும்பு, தொண்டைகத்தி, புலிக்கூடு, கோயில்காடு, முருகமலை, வறட்டாறு, கருங்கல் உட்பட பல பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக மா விவசாயம் சாகுபடி செய்யப்படுகிறது. மா மரங்களில் தை மாதங்களில் பூ பூக்க துவங்கும். மாசி மற்றும் பங்குனி மாதத்தில் அடுத்த நிலையான பாசியாக மாறும். அதனை தொடர்ந்து மா பிஞ்சுகள் வரும். மா பிஞ்சுகள் 60 முதல் 70 நாட்களில் அடுத்த நிலையான மாங்காயாக அறுவடைக்கு தயாராகும்.பெரியகுளம் தோட்டக்கால் மண்ணிற்கு மல்கோவா, பங்கனபள்ளி, சப்போட்டா, காசாகாய், நாட்டுக்காய் உட்பட பல வகையான காய்களும் நன்கு வளரும்.மூன்றாண்டுகளுக்கு பிறகு பெரியகுளம் பகுதியில் வடகிழக்கு பருவமழை திருப்திகரமாக

பெய்துள்ளது. இதனால் மாந்தோப்புகளில் மண்வளம் அதிகரித்துள்ளது. இதனால் இந்த ஆண்டு விளைச்சல் அமோகமாக இருக்கும் என விவசாயிகள் கருதுகின்றனர். மாந்தோப்புகளின் பசுமையை பார்த்து குத்தகைக்கு எடுப்பர். இந்த ஆண்டு மாந்தோப்புகள் அதிகளவில் குத்தகைக்கு எடுப்பதற்கு போட்டி ஏற்பட்டுள்ளது.

## மாவட்டத்தில் வெண்டை விளைச்சல் அமோகம்! 500 ஏக்கரில் நடவு செய்த விவசாயிகள்

சிவகங்கை : மாவட்டத்தில் 500 ஏக்கரில் விவசாயிகள் வெண்டை சாகுபடியில் ஈடுபட்டு நல்ல விளைச்சல் கண்டுள்ளதாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சிவகங்கை அருகே சாலூர், இடைய மேலூர், ஏனாதி, அரசனூர், தமறாக்கி மற்றும் பிற பகுதிகளில் விவசாயிகள் கிணற்று பாசனம் மூலம் வெண்டை சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக இங்கு சக்தி, எம்.10, யு.எஸ்.,8063 ரக வெண்டை சாகுபடி அதிகளவில் நடக்கிறது. சீசன் காலம் ஏதுமின்றி ஆண்டுதோறும் கிணற்று பாசனம் மூலம் விவசாயிகள் வெண்டை நடவு செய்து வருகின்றனர். 500 ஏக்கர்: இம்மாவட்டத்தை பொறுத்தமட்டில், 500 ஏக்கரில் விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்துள்ளனர். வெண்டை நடவு செய்த நாளில் இருந்து 45வது நாளில் வெண்டைக்காய் வரத்து இருக்கும். சந்தை நடைபெறும் நாட்களுக்கு ஏற்ப விவசாயிகள் வெண்டையை பறித்து விற்று வருகின்றனர். வரவேற்பு: தற்போது கார்த்திகை, மார்கழி மாதத்தில் மாலை அணிந்து பக்தர்கள் விரதம் இருந்து வருகின்றனர். இதற்காக காய்கறிகளுக்கு கடும் கிராக்கி உள்ளது. குறிப்பாக வெண்டைக்காய்க்கு நல்ல வரவேற்பு இருப்பதால், மார்க்கெட்டில் கிலோ ரூ.25 முதல் 40 வரை விற்கின்றனர். சராசரியாக கிலோ ரூ.30 வரை விற்பனையாகிறது, என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் எம்.பாலமுருகன் கூறும்போது; வெண்டை விளைச்சல் அதிகரித்துள்ளது.

பனிக்காலமாக இருப்பதால் வெண்டை, கத்தரியை காய் துளைப்பான் தாக்க கூடும். இதற்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் கார்பரில் மருந்தை கலந்து தெளிக்கவும். நாற்று அழுகல் நோய்க்கு காப்பர் ஆசிஜி குளோரைடு 1லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மருந்தை கலந்து தெளிக்கவும். சாம்பல் நோய் தாக்கினால் ஒரு லிட்டர் தண்ணீரில் 3 கிராம் அளவில் நனையும் கந்தகத்தை கலந்து தெளித்து காய்கறிகளை காத்து விவசாயிகள் லாபம் பெறலாம்," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கலசபாக்கம் வேளாண்மை கூட்டுறவு வங்கியில் மகளிர் குழுக்களுக்கு ரூ.10 லட்சம் கடன்</u>**

கலசபாக்கம், : கலசபாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. விழாவுக்கு சங்க தலைவர் கே.ஆர்.பாண்டியன் தலைமை தாங்கி 3 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு நேரடி கடனாக சுய தொழில் செய்ய ரு.10 லட்சம் கடன் உதவிகளை வழங்கி பேசினார். முன்னதாக அனைவரையும் கள மேலாளர் செந்தில்குமார் வரவேற்றார்.

**<u>வம்பன் வேளாண் நிலையத்தில் பழங்கள், காய்கறிகள் பதப்படுத்தும் தொழில்நுட்ப பயிற்சி</u>**

ஆலங்குடி, : ஆலங்குடியை அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்தும் தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியினை நிலையத்தின் தலைவர் (பொ) பசுபதி துவக்கி வைத்துபேசுகையில், உணவு உற்பத்தியில் இந்தியா சீனாவிற்கு அடுத்தப்படியாக 2வது இடத்தில் உள்ளது. வருடத்திற்கு 225

முதல் 230 மில்லியன் டன் தானியங்கள், 14 மில்லியன் டன் பருப்பு வகைகள், 45 மில்லியன் டன் பழ வகைகள், 85 மில்லியன் டன் காய்கறி கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், அறுவடை செய்யப்பட்ட பொருட்களை சரியான முறையில் பாது காக்க முடியாமல் 20 முதல் 40 சதவீதம் வரை வீணாகிறது. மேலும் உறபத்தி செய்த வேளாண் பொருட்களிலிருந்து 20 சதவீதம் மட்டுமே பதப்படுத்தப் படுகிறது என்று புள்ளியியல் விபரங்கள் கூறுகிறது. ஆகவே, அறுவடைக்கு பின் ஏறப்படும் இழப்பினை பல்வேறு தொழில் நுட்பங்களைக் கையாள்வதன் மூலம் தவிர்க்கலாம். இதனால் உணவு உற்பத்தியாளருக்கு அதிக வருமானம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்றார். இப்பயிற்சியில் மனையியல் பேராசியர் கீதா பேசுகையில், பழங்கள் மற்றும் காய்கறிகளின் முக்கியத்துவத்துவம், அறுவடைக்குப் பின் சார் தொழில்நுட்பத்தை பற்றி விளக்கினார். மேலும் பழங்கள் மற்றும் காய்கறிகளிலிருந்து பலவிதமான பதப்படுத்தும் தொழில்நுட்பங்களாகிய ஜாம், ஜூஸ், ஊறுகாய் மற்றும் சாஸ் போன்றவற்றை செயல்விளக்கம் மூலம் செய்து காண்பித்தார். இப்பயிற்சியில் புதுகை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மகளிர், தொழில் முனைவோர்கள் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## <u>கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யப்படும் நெல்லுக்கு வங்கி கணக்கில் பணம் வரவு</u>

தஞ்சை, : அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் விற்பனை செய்யப்படும் நெல்லுக்கான தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தஞ்சை நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் முகமது பாதுஷா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்குரிய தொகை

விவசாயிகளின் வங்கி கணக்கில் உடனுக்குடன் வரவு வைக்கப் படுகிறது. நெல்லுக்குரிய தொகை நேரடி கொள்முதல் நிலையங்களில் பணமாக பட்டுவாடா செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்துக்கு நெல் விற்பனைக்கு கொண்டு வரும்போது வங்கி கணக்கு புத்தகத்தின் முதல்பக்க நகலுடன் வர வேண்டும். வங்கி கணக்கு துவங்காத விவசாயிகள் வங்கி கணக்கை உடனடியாக துவக்கி இத்திட்டத்தில் பயன்பெறலாம். இந்த நடைமுறையில் மேலும் விவரம் அறிய வேண்டுமானால் தஞ்சை சரகம் 04362- 235823, கும்பகோணம் சரகம் 0435- 2415207, பட்டுக்கோட்டை சரகம் 04373 - 235080 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தஞ்சை நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் முகமது பாதுஷா தெரிவித்துள்ளார்.

## பட்டுக்கோட்டையில் நாளை விவசாயிகள் கருத்துக்கேட்பு கூட்டம்

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டையில் விவசாயிகள் கருத்துக்கேட்பு கூட்டம் நாளை நடக்கிறது. பட்டுக்கோட்டை ஆர்டிஓ அரங்கநாதன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பட்டுக்கோட்டை வட்டம் குறிச்சி சரகத்தை சேர்ந்த அடுத்த நெய்வாவிடுதி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மக்கள் நேர்காணல் முகாம் இன்று நடக்கிறது. கலெக்டர் சுப்பையன் தலைமை வகிக்கிறார். முகாமில் நெய்வாவிடுதி மற்றும் அதை சுற்றியுள்ள பொதுமக்கள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை மனுக்கள் மூலம் தெரிவித்து பயன்பெறலாம். அதேபோல் பட்டுக்கோட்டை கோட்ட அளவிலான விவசாயிகள் கருத்துக்கேட்பு கூட்டம் ஆர்டிஓ அலுவலகத்தில் நாளை நடக்கிறது. ஆர்.டி.ஓ. தலைமை வகிக்கிறார். எனவே இந்த கூட்டத்தில் கோட்ட அளவிலான விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம்.

## நீடாமங்கலத்தில் நாளை தென்னை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தென்னை சாகுபடியில் தொழில்நுட்ப பயிற்சி பெறுவதற்கு பெயர்களை பதிவு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண் மை அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் சோழன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் திருவாரூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தென்னை சாகுபடி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒருநாள் கட்டணமில்லா பயிற்சி நாளை (11ம் தேதி) நடை பெற உள்ளது. பயிற்சியில் தென் னை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து செயல் முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. எனவே ஆர்வமுள்ள விவசாயிகளும், அரசு சாரா நிறுவன உறுப்பினர்களும் (தொண்டு நிறுவனம்) மகளிர் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு பயன்பெறலாம். விருப்பமுள்ளவர்கள் தங்களின் பெயர்களை நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் முன்பதிவு செய்து கொள்ள லாம். அல்லது 04367- 260666, 261444 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு பேராசிரியர் சோழன் தெரிவித்துள்ளார்.

## திருப்புன்கூர் கிராம சபை கூட்டம் இலவச வெள்ளாடு வழங்க 35 பயனாளிகள் தேர்வு

சீர்காழி, : திருப்புன்கூர் ஊராட்சியில் நடந்த சிறப்பு கிராமசபை கூட்டத்தில் இலவச வெள்ளாடுகள் வழங்குவதற்காக 35 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். நாகை மாவட்டம் சீர்காழி அருகே திருப்புன்கூர் ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் விஜயகுமார் தலைமை வகித் தார். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சங்கர், கால்நடை மருத்துவர் பூமதி முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி செயலாளர் சாமிதாஸ் வரவேற்றார். ஊராட்சி தலைவர் விஜயகுமார் பேசுகையில், கலெக்டர் முனுசாமி உத்தரவின்பேரில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெறுகிறது. இதில் வறுமை கோட்டிற்குகீழ் உள்ள 35 பேர் கண்டறியப்பட்டு அவர்களுக்கு இலவச வெள்ளாடுகள் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று கூறினார். இதில் ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் முத்துக்குமாரசாமி, மகாதேவன், ராஜேந்திரன், ராஜகுமாரி கமாலியேல், அதிமுக நிர்வாகி துரைசாமி, கோபால், மாலினி, ஆனந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். துணைத் தலைவர் சுமதி சாமிநாதன் நன்றி கூறினார். முத்துப்பேட்டை: திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை அடுத்த சங்கேந்தி ஊராட்சியில் சிறப்பு கிராம சபா கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் மனோகரன் தலைமையில் நடைப்பெற்றது. துணைத்தலைவர் தட்சிணாமூர்த்தி, கவுன்சிலர் நாகராஜன் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக ஒன்றியக்குழு தலைவர் நடராஜன் கலந்து கொண்டார். கூட்டத்தில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கு 25 பயனாளிகளை தேர்வு செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது. கால்நடை மருத்துவர் சந்தோஷ் குமார், கிராம நிர்வாக அலுவலர் அருட்செல்வன், ஊராட்சி துணைத் தலைவர் ராணி, கவுன்சிலர்கள் நடராஜன், செந்தில்குமார், ராணி மற்றும் அணைத்து மகளிர் சுய உதவிக்குழு பெண்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## <u>தொடரும் விசேஷ தினங்கள் செண்டு மல்லி விலை உயரும் வாய்ப்பு விவசாயிகள் மகிழ்ச்சி</u>

செம்பட்டி: அம்பாத் துரை பகுதியில் பறிக்கப்படும் செண்டு பூக்கள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. வரும் விசேஷ நாட்களில் பூக்க ளின் விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னாளபட்டி அருகே உள்ள அம்பாத்துரை, ஊத்துப்பட்டி, காமலாபுரம், பெருமாள் கோவில்பட்டி, ஜாதிக்கவுண்டன்

பட்டி, தொப்பம்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் பூ விவசாயிகள் சம்பங்கி, செவ் வந்தி, மல்லிகை, ஜாதிப்பூ, செண்டு பூக்களை பயிரிட்டு இருந்தனர். பூ மாலைகள் திருமண வரவேற்பு தட்டிகளுக்கு பயன்படுத்தப் படும் செண்டு பூக்கள், மஞ்சள், மஞ்சளோடு கூடிய பளுப்பு நிறம், ஆரஞ்சு நிறங்களில் மலர்ந்து பார்ப்பதற்கு சூரியகாந்தி பூக்கள் போல் காட்சி யளிக்கிறது. செண்டு பூக்கள் மார்க்கெட்டில் தற்போது ஒரு கிலோ ரூ.50க்கு விற்கப்படுகிறது. அம்பாத்துரை பகுதியில் தினசரி பூ விவசாயி கள் அதிகாலை நேரங்களில் பூக்களை பறித்து 7மணிக்குள் நிலக்கோட் டை மற்றும் திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு கொண்டு செல்கின்றனர். பின்னர் லாரிகள் மூலம் சென்னை, கோவை, திருச்சி ஆகிய நகரங்களுக்கு பூக்களை அனுப்பி வைக்கின்றனர். செண்டு பூ விவசாயிகள் கூறுகையில், செண்டு பூக் கள் செவ்வந்தியை போல நாற்று விட்டுத்தான் நடவு செய்ய முடியும், மண் வளத் தைப் பொறுத்து பூக்களின் நிறம் சிறிது மாறும். புரட்டாசி மாதம் நாற்று களை பிடுங்கி நடவு செய் தோம். மானாவாரி யாக பயிரிட்டிருப்பதால் தண்ணீர் பாச்ச தேவையில்லை. ஈரப்பதத்திலே யே வளர்ந்துவிடும் புரட்டாசி மாதம் நடவு செய்து, தற்போது கார்த்திகை மாதம் நாங்கள் அறுவடை செய்து வருகிறோம். ஏக்கர் ஒன்றுக்கு வாரம் ஒரு முறை 300 முதல் 400 கிலோ வரை பூக்களை பறிக்கலாம். இப்போது சபரிமலை ஐயப் பன் கோவில் சீசன் என்ப தால் பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ செண்டு ரூ.50க்கு விற்கப்படுகிறது. இனி ஒரு கிலோ ரூ.100 வரை விற் கலாம் எதிர்பார்க்கப்படுகிறது என்றார். அடுத்து வரும் விசேஷ நாட்களில் ஒரு கிலோ ரூ.150 வரை விலை போகும் என்பதால், செண்டு பூ விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தமிழகத்தில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்</u>




சென்னை, தமிழகத்தில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை தமிழகத்தில், வட கிழக்கு பருவமழை காலம் வருகிற 31-ந் தேதி வரை உள்ளது. பொதுவாக, தென் மேற்கு பருவ மழையை விட, வட கிழக்கு பருவமழை காலத்தில் தான் தமிழகத்தில் அதிக மழை பெய்யும். இந்த ஆண்டு, தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வட கிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்துள்ள நிலையில், சென்னை உள்பட வட மாவட்டங்களில் போதுமான அளவு மழை பெய்யவில்லை. இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன் இலங்கைக்கும், தமிழகத்துக் கும் இடையே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால், ஆங்காங்கே அநேக இடங்களில் மழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று அதிகாலை மற்றும் அலுவலகங் களுக்கு செல்லும் நேரத்திலும் சற்று பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக 8 சென்டி மீட்டர் மழை நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடையும் 24 மணி நேரத்தின் அடிப்படையில், தமிழகத்தில் பெய்துள்ள மழை விவரம் வருமாறு:- அதிகபட்சமாக சிதம்பரத்தில் 8

சென்டி மீட்டரும், குன்னூரில் 7 சென்டி மீட்டரும், பாபநாசத்தில் 5 சென்டி மீட்டரும், மாதவரத்தில் 4 சென்டி மீட்டரும், கோத்தகிரி, சிவகிரி, அம்பாசமுத்திரம் பகுதிகளில் தலா 3 சென்டி மீட்டரும், மாமல்லபுரம், சிவகங்கை, பெரியநாயக்கன்பாளையம், அறந்தாங்கி, பாளையங் கோட்டை ஆகிய இடங்கில் தலா 2 சென்டி மீட்டரும் மழை அளவும் பதிவாகி உள்ளது. இன்றும் மழை பெய்யும் இந்த நிலையில் வானிலை அதிகாரிகள் கூறும்போது, தமிழகம்-இலங்கை இடையே வங்க கடலில் இருக்கும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, இன்று (வியாழக்கிழமை) தென் தமிழகத்தின் அநேக இடங்களிலும், சென்னை உள்ளிட்ட வட சென்னை மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என தெரிவித்துள்ளனர்.

**<u>பாபநாசம் அணையில் 17 ஆயிரம் கனஅடி உபரி நீர் திறப்பு தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு அகஸ்தியர் அருவி மூழ்கியது</u>**



விக்கிரமசிங்கபுரம், பாபநாசம் அணைக்கு வரும் 17 ஆயிரம் கன அடி தண்ணீர், அப்படியே உபரி நீராக வெளியேற்றப்படுவதால், தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. அகஸ்தியர் அருவி இருந்த இடம் தெரியாமல் மூழ்கி விட்டது. பலத்த மழை வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு விக்கிரமசிங்கபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளிலும், பாபநாசம் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதனால் பாபநாசம் அணைக்கு நேற்று மாலை 6 மணி அளவில் 17 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்தது. ஏற்கனவே பெய்த மழையில் அணை நிரம்பியதால், அணைக்கு வரும் 17 ஆயிரம் கன அடி தண்ணீர் அப்படியே உபரி நீராக வெளியேற்றப்படுகிறது. இதனால்

தாமிரபரணி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. அகஸ்தியர் அருவி மூழ்கியது அகஸ்தியர் அருவி மறைந்து எந்த பக்கம் பார்த்தாலும் தண்ணீராக கொட்டியது. கல்யாண தீர்த்தத்தில் 100 அடி உயரத்தில் இருந்து தண்ணீர் பயங்கர இறைச்சலுடன் கொட்டியது. இதனால் தண்ணீர் கரைபுரண்டு ஓடி பாபநாசம் தலையணை மறைந்து காணப்படுகிறது. பாபநாசத்தில் எங்கு பார்த்தாலும் வெள்ளக்காடாக உள்ளது. பாபநாசம் கோவிலில் உள்ள அர்த்த சாம மண்டபம் தண்ணீரில் மூழ்கியது. மேலும் பாபநாசம் கோவில் முன்பு இருந்த விநாயகர் கோவிலும் தண்ணீரில் மூழ்கியது. பாபநாசத்தில் இருந்து காரையாறு செல்லும் பாதையில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு இருந்த பெரிய பாலம் கடந்த 1992-ம் ஆண்டு அடித்துச் செல்லப்பட்டது. அதற்காக அப்போது தற்காலிகமாக இரும்பு பாலம் அமைக்கப்பட்டு இருந்தது. நேற்று இரும்பு பாலத்தில் சுமார் 8 அடி உயரத்துக்கு தண்ணீர் செல்கிறது. இதனால் அந்த பாலத்தில் வாகனங்கள் செல்ல முடியாமல் பாபநாசம்-முண்டந்துறை போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.நெல்லை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

திருவள்ளூர்-காஞ்சீபுரம்

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர், திருப்பாச்சூர், பேரம்பாக்கம், கடம்பத்தூர், கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை, பொன்னேரி, பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளில் மழை பெய்தது. காஞ்சீபுரம் மாவட்டம் காஞ்சீபுரம், அய்யன்பேட்டை, முத்தியால்பேட்டை, சோழிங்கநல்லூர், செங்கல்பட்டு பகுதிகளில் லேசான மழை பெய்தது. அதேப்போன்று கல்பாக்கம், வண்டலூர், கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், மாமல்லபுரம், வடநெம்மேலி, உத்திரமேரூர், நெல்வாய் பகுதிகளிலும் லேசான மழை பெய்தது.

விழுப்புரம்-திண்டிவனம்

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பரவலாக பெய்த மழை

நேற்றும் நீடித்தது. நேற்று மதியம் 2 மணிக்கு பலத்த மழை பெய்தது. 30 நிமிடம் நேரம் நீடித்த இந்த மழையால் சாலைகளில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. திண்டிவனத்தில் நேற்று காலை 11 மணி அளவில் பெய்யத்தொடங்கிய மழை 1 மணி நேரத்திற்கு மேலாக கொட்டி தீர்த்தது. அதன் பின்னர் சாரல் மழை பெய்தது. இந்த மழை காரணமாக முக்கிய சாலைகளான புதுச்சேரி, வந்தவாசி, செஞ்சி, விழுப்புரம் மற்றும் சென்னை சாலைகளில் மழை வெள்ளம் பாய்ந்தது. திண்டுக்கல் -தேனி

திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று காலையில் இருந்தே அவ்வப்போது சாரல் மழை பெய்தது. திண்டுக்கல்லில் மாலை 3.30 மணி முதல் 4.10 மணி வரை சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, கொடைக்கானல், நத்தம், செம்பட்டி உள்பட மாவட்டம் முழுவதும் மழை பெய்தது. தேனி மாவட்டத்தில் தேனி நகரம் மற்றும் போடியில் நேற்று காலையில் இருந்து அவ்வப்போது சாரல் மழை பெய்தது.

குமரிமாவட்டம்

குமரி மாவட்டத்தில் நேற்று பகல் 2 மணி அளவில் பலத்த மழை பெய்தது. திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் நேற்று மாலை லேசான தூறல் மட்டும் இருந்தது. வேலூரில் நேற்று காலை 11.30 மணி அளவில் மழை பெய்தது. பின்னர் அவ்வப்போது சாரல் மழை பெய்து கொண்டே இருந்தது.

## <u>அரிமளம் ஒன்றியத்தில் திட்டபணிகளை வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு</u>



அரிமளம் ஒன்றியத்தில், திட்டப்பணிகள் குறித்து வேளாண்மை

இயக்குனர் ஷாஜகான் ஆய்வு செய்தார். திட்டபணிகள் ஆய்வு அரிமளம் ஒன்றியம் பெருங் குடி மாதிரி கிராமத்தில் நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் இயங்கும் ஒற்றை சாளர அறிவு சார் தகவல் மையத்தின் செயல்பாடுகள் குறித்து வேளாண்மை இணை இயக்கு னர் ஷாஜஹான் ஆய்வு செய்தார். இம்மையத்தில் வேளாண்மைத்துறை மற்றும் பிற சாகோதர துறைகளின் துறைசார்ந்த செயல்பாடுகள், தொழில்நுட்பங்களை விளக்கும் புத்தகங்கள், தொழில்நுட்ப செய்திகள் அடங்கிய பேனர்கள் ஆகியவை விவசாயிகளின் காட்சிக்கு வைக்கப் பட்டிருபதையும் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். இந்த மையத்தின் செயல் பாடுகள் மற்றும் சேவைகள் குறித்து விவசாயிகளிடம் கேட் டறிந்தார். பின்னர் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல் படுத்தப்படும் நடவு துவரை செயல்விளக்கத்தினை மருதம் பட்டி கிராமத்தில் டோரா ராஜரெத்தினம் மற்றும் நெய்வாசல்பட்டி கிராமத்தில் முருகேசன் ஆகிய விவசாயிகளின் வயல்களில் ஆய்வு செய்தார். விவசாயி களுக்கு மானியத்தில் வழங்கப்படும் இடு பொருட்கள் குறித்து விவசாயி களிடம் கேட்டு ஆய்வு செய்தார். அதிகாரிகள் இந்த ஆய்வின் போது பெருங்குடி நீர் பாசன சங்கத்தலைவர் பொன். சுந்த ரேசன், அரிமளம் வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார், வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுப்பாடு)ஆதிலெட்சுமி, வேளாண்மை அலுவலர் கருப்பையா, துணை வேளாண்மை அலுவலர் பாலசுப்ரமணியன், உதவி விதை அலுவலர் ராஜேந்திரன், உதவி வேளாண்மை அலுவலர் மாணிக்கம் மற்றும் அட்மா திட்டத்தின் உதவி தொழில் நுட்ப மேலாளர் லெட்சுமணன் ஆகியோர் உடனிருந்தனர்.

**திருவண்ணாமலையில் அம்மா மருந்தகம்-பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தொடங்கிவைத்தார்**



திருவண்ணாமலையில் அம்மா மருந்தகம் மற் றும் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி ஆகியவற்றை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி திறந்துவைத்தார்.

அம்மாமருந்தகம்

திருவண்ணாமலை கற்பகம் கூட்டுறவு அங்காடி சார்பில் முத்து விநாயகர் கோவில் தெருவில் அம்மா மருந்தகம் மற்றும் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை சார்பில் வளையல்கார தெருவில் பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி ஆகியவை திறப்பு விழா நேற்று நடந்தது. அம்மா மருந்தகம் திறப்பு விழாவுக்கு கலெக்டர் அ.ஞான சேகரன் தலைமை தாங் கினார். தமிழக வேளாண் மைத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு அம்மா மருந்தகத்தை திறந்துவைத்து முதல் விற்ப னையையும் தொடங்கி வைத் தார். பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி தொடர்ந்து வளையல்கார தெருவில் தொடங்கப்பட்டுள்ள பண்ணை பசுமை நுகர் வோர் அங்காடி திறப்பு விழா நடந்தது. கலெக்டர் அ.ஞான சேகரன் தலைமை தாங்கினார். அமைச்சர் அக்ரி கிருஷ்ண மூர்த்தி கலந்து கொண்டு பண்ணை பசுமை நுகர் வோர் அங்காடியை திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். விழாவில் ஏ.கே.அரங்க நாதன் எம்.எல்.ஏ., நகராட்சி தலைவர் என்.பாலச்சந்தர், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் எம்.எஸ்.நைனாக் கண்ணு, மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் வி.கனகராஜ், மொத்த விற்பனை பண்டக சாலை தலைவர் வி.பவன் குமார், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பெரியசாமி, துணைப்பதி வாளர் நந்தக்குமார், கூட்டுறவு மொத்தவிற்பனை பண்டக சாலை இயக்குனர்கள் கே.ராஜன், என்.பாண்டு, எஸ்.ஆர்.தருமலிங்கம், இ.என்.நாராயணன் பி.திவாகர், ஆர்.சி.ராஜாங்கம் மற்றும் மாணவர் அணி துணை செயலாளர் உஷாநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.